# சேலம் மாநகராட்சி

**2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ஆம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிகள் 2023, அத்தியாயம் 4, பகுதி I-ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

## பொருள்கள்

**1)** சேலம் மாநகராட்சி **2023–24** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியம் – (O & M Work ) நிதியின் கீழ் அம்மாபேட்டை வார்டு அலுவலகம் கோட்டம் எண் **39** இல் வையாபுரி தெரு பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி உயர்நிலை பள்ளி கட்டிடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு **2023–24** செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **19.00** இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண் **25739 / 2023 /** SS2 நாள்: **26–10–2023** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில் மேற்படி பணிக்கு **24–11–2023** இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகை **0.05%** குறைவு என வரப்பெற்ற M/s Ganesan Contract Company, சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**15,67,026/–**ஐ ஏற்று சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.**495** நாள்: **26–12–2023** இல் அனுமதிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டு தற்போது பணி முடிக்கப்பட்டது.

இப்பணியினை மேற்கொள்ளும்போது பணிதளத்தில் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மற்றும் மாநகர பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படி பணிதளத்தின் தன்மைக்கேற்ப ஒப்பந்தத்தில் உள்ள சில இனங்கள் கூடுதலாக செய்வதற்கும் மதிப்பீட்டில் இல்லாத சில இனங்கள் புதியதாக மேற்கொள்ள வேண்டியும் இருந்தது. அவ்வாறு புதியதாக உள்ள இனங்களுக்கு ஒப்பந்தத்தில் (BOQ) விலைவிகிதம் இல்லாததால் தமிழ்நாடு பொதுப்பணித்துறை செந்தார விலைவிகிதப்பட்டியலில் (SOR 2023-24 உள்ள இனங்களின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்த விபரம் பின்வருமாறு

தொடர்ச்சி..

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : (BOQ)**

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Dadooing walls with Ceramic tiles | 20.00 | 26964.20 | 55.59 | 74935.32 | 47971.12 |
| 2 | Providing and laying of 63mm thick high strength type of interlocking pavement block | 21.00 | 20903.61 | 46.72 | 46486.40 | 25582.79 |
| 3 | Repairs to the Doors and Windows including the cost of Locking aragements | LS | 5000.00 | 1.00 | 9900.00 | 4900.00 |
| 4 | Supplying, fabrication and fixing of Ornamental grill | 300.00 | 30000.00 | 337.00 | 33700.00 | 3700.00 |
| 5 | Painting two coats with ready mixed plastic emulsion paint | 1346.00 | 323470.72 | 1831.38 | 439531.20 | 116060.48 |
| 6 | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for Old iron works | 90.00 | 7637.40 | 270.25 | 22836.13 | 15198.73 |
| 7 | Supplying and fixing of Cudappa slab | 2.00 | 777.20 | 2.53 | 982.91 | 205.71 |
| | **II மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் (SOR)** | | | | | |
| 8 | Providing two legged scaffolding using 15cm dia-meter | | | 74.96 | 98343.77 | 98343.77 |
| 9 | Dismantaling the Damaged Reinforced Cement Concrete | | | 1.44 | 5919.54 | 5919.54 |
| 10 | Flooring with first quality plain ceramic tiles of approved Colour | | | 5.18 | 4593.68 | 4593.68 |
| 11 | Paving the floor with pre-polished anti-skid tiles | | | 116.08 | 163069.18 | 163069.18 |
| 12 | Paving the floor with design Antiskid ceramic tiles | | | 4.35 | 4253.47 | 4253.47 |
| 13 | Flooring with Stain free Nano polish Vetrified flooring tiles | | | 195.03 | 287638.05 | 287638.05 |
| 14 | Supplying and fixing of metal coated sheets Aluminium zinc alloy | | | 24.00 | 24386.16 | 24386.16 |
| 15 | Painting two coats with enamel paint for Old Plastered surface | | | 582.79 | 90250.86 | 90250.86 |
| 16 | Painting with black board paint two coats | | | 22.47 | 3883.49 | 3883.49 |
| 17 | Supply and Fixing of the Following Pipes and Specials | | | | | |
| | 110mm Dia PVC Elbow | | | 4.00 | 263.08 | 263.08 |
| | 110mm Dia PVC Tee | | | 4.00 | 639.28 | 639.28 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 110mm Dia PVC Air Ven Cowl | | | 4.00 | 329.04 | 329.04 |
| | 20 mm Dia PVC Pipe | | | 7.70 | 194.73 | 194.73 |
| | 20mm Dia PVC Elbow | | | 5.00 | 35.00 | 35.00 |
| | 20mm Dia PVC Tee | | | 1.00 | 9.95 | 9.95 |
| | CP Long Body Tap | | | 19.00 | 29340.37 | 29340.37 |
| | CP Push Cock Tap | | | 4.00 | 823.60 | 823.60 |
| | 3/4"x 1/2" Brass Elbow | | | 3.00 | 121.14 | 121.14 |
| | 1"x 3/4" RFTA | | | 10.00 | 226.90 | 226.90 |
| | 3/4"x 9" GI Brace Nipple | | | 10.00 | 346.80 | 346.80 |
| | 3/4"x 1/2" GI GI Elbow | | | 10.00 | 403.80 | 403.80 |
| 18 | Manufacturing, Supplying and Fixing of Stainless Steel Hand rails | | | 7.92 | 43823.18 | 43823.18 |
| 19 | Plain cement concrete 1:2:4, using 10mm ISS gauge HBGG metal | | | 0.54 | 3405.15 | 3405.15 |
| 20 | Material and labour Charges for Painting & Writting of Letterings. | | | 1.00 | 48400.00 | 48400.00 |
| | Total | | **414753.13** | | **1439072.18** | **1024319.05** |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்திலும், மதிப்பீட்டில் இல்லாத புதிய இனங்கள் பொது பணித்துறையின் **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதத்திலும் பணிகள் செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Ganesan Contract Company, சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**19.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ.**1024319.05**/–ஐ, M/s Ganesan Contract Company, சேலம். அவர்களுக்கு வழங்க மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No.267 /B/ 2023 –2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**2)** சேலம் மாநகராட்சி **2023–24** ஆம் ஆண்டு SFC பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் கோட்டம் எண் **39** இல் வையாபுரி தெருவில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் கட்டிட பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.**24.50** இலட்சத்திற்கு **24–11–2023** இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு **0.05%** குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Ganesan Contract Company, ஒப்பந்ததாரர் சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**20,21,524.00**/–ஐ ஏற்று ஒப்புக்கொள்ளப்பட்டு **18–12–2023** இல் பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி பணியிடங்களில் ஏற்பட்ட தளஅளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும் சில இனங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மாற்றங்களுடன் இப்பணியை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : (BOQ)**

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Dismantaling Pressed tiles & Weathering Course | 207.00 m2 | 9085.23 | 271.37 m2 | 11804.60 | 2719.37 |
| 2 | Cement concrete of mix 1:4:8, using 40 mm metal | 4.00 m3 | 19812.80 | 4.02 m3 | 19911.06 | 98.26 |
| 3 | Supplying and erecting in the position of MS sheets | | | | | |
| | a). For Column | 53.00 m2 | 62525.16 | 54.15 m2 | 63869.93 | 1344.77 |
| | b). Grade Beam | 25.00 m2 | 11027.50 | 25.85 m2 | 11399.85 | 372.35 |
| 4 | Providing and laying in position, standardized concrete mix M-20 Grade | | | | | |
| | a). Up to Basement | 10.00 m3 | 78464.70 | 11.37 m3 | 89209.02 | 10744.32 |
| 5 | Finishing the top Solar Reflectiv Ceramic Tiles | 224.00 m2 | 224112.00 | 284.26 m2 | 284402.13 | 60290.13 |
| 6 | Repairs to the Doors and Windows | 1.00 No | 5000.00 | 1.00 No | 9900.00 | 4900.00 |
| 7 | Supplying, fabrication and fixing of Ornamental grill | 950.00 Kg | 95000.00 | 2358.70 Kg | 235870.00 | 140870.00 |
| 8 | Painting two coats ready mixed Plastic Emulsion Paint | 1284.00 m2 | 308570.88 | 1806.98 m2 | 433675.20 | 125104.32 |

தொடர்ச்சி..

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 | Painting two coats enamel paint for new iron works | 68.00 m2 | 9721.96 | 116.05 m2 | 16537.13 | 6815.17 |
| 10 | Supplying and fixing of metal coated sheets Aluminium zinc alloy | 82.00 m2 | 83312.00 | 114.33 m2 | 116159.28 | 32847.28 |
| 11 | Supply and Fixing of the Pipes and Specials | | | | | |
| | 110mm Dia PVC Pipe | 27.00 Rm | 7419.60 | 33.80 Rm | 9278.10 | 1858.50 |
| 12 | Painting two enamel paint for old iron works | 129.00 m2 | 10946.94 | 685.87 m2 | 57956.02 | 47009.08 |
| **II.மதிப்பீட்டில் இல்லாத SOR இனங்கள் :** | | | | | | |
| 13 | Providing two legged scaffolding (8.00m Height) | | | 78.64 Rm | 103171.75 | 103171.75 |
| 14 | Dismantaling the Damaged Reinforced Cement Concrete | | | 2.46 m3 | 10112.54 | 10112.54 |
| 15 | Plain cement concrete 1:2:4 mix using 10mm Metal | | | 20.35 m3 | 128323.84 | 128323.84 |
| 16 | Painting two coats enamel paint of Old Plastered surface | | | 682.02 m2 | 105617.62 | 105617.62 |
| 17 | Painting with black board paint two coats | | | 23.21 m2 | 4011.38 | 4011.38 |
| 18 | Supply and Fixing of the Following Pipes and Specials | | | | | |
| | 110mm Dia PVC Elbow | | | 5.00 Nos | 328.85 | 328.85 |
| | 110mm Dia PVC Tee | | | 5.00 Nos | 799.10 | 799.10 |
| | 110mm Dia PVC Air Ven Cowl | | | 5.00 Nos | 411.30 | 411.30 |
| 19 | Material & labour Charges for Wall Painting & Writting of Letterings. | | | 1.00 No | 65650.00 | 65650.00 |
| | **Total** | | **924998.77** | | **1778398.7** | **853399.93** |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Ganesan Contract Company சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**24.50** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ.**853399.93/–**னை, M/s Ganesan Contract Company சேலம் அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No.266/B/ 2023 –2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

3) சேலம் மாநகராட்சிக்குட்பட்ட சூரமங்கலம், அஸ்தம்பட்டி, அம்மாப்பேட்டை கொண்டலாம்பட்டி ஆகிய நான்கு மண்டலங்களில் வரி மற்றும் வரியில்லா இனங்களில் கீழ்க்கண்டவாறு நிலுவைத்தொகை உள்ளது.

**சூரமங்கலம் வார்டு அலுவலகம்**

| வ.எண் | வரியினம் | 2024–2025 ஆம் ஆண்டு வரை நிலுவைத்தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 1732.84 |
| 2 | காலியிடவரி | 164.23 |
| 3 | தொழில்வரி | 298.93 |
| 4 | குடிநீர் கட்டணம் | 956.85 |
| 5 | கடை வாடகை மற்றும் குத்தகை இனம் | 692.88 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணம் | 191.95 |
| 7 | பாதாள சாக்கடைக் கட்டணம் | 39.73 |
| | **மொத்தம்** | **4077.41** |

**அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம்**

| வ.எண் | வரியினம் | 2024–2025 ஆம் ஆண்டு வரை நிலுவைத்தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 3400.17 |
| 2 | காலியிடவரி | 250.19 |
| 3 | தொழில்வரி | 993.41 |
| 4 | குடிநீர் கட்டணம் | 612.60 |
| 5 | கடை வாடகை மற்றும் குத்தகை இனம் | 336.05 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணம் | 394.79 |
| 7 | பாதாள சாக்கடைக் கட்டணம் | 96.24 |
| | **மொத்தம்** | **6083.44** |

**அம்மாப்பேட்டை வார்டு அலுவலகம்**

| வ.எண் | வரியினம் | 2024–2025 ஆம் ஆண்டு வரை நிலுவைத்தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 1283.89 |
| 2 | காலியிடவரி | 124.71 |
| 3 | தொழில்வரி | 264.96 |
| 4 | குடிநீர் கட்டணம் | 685.65 |
| 5 | கடை வாடகை மற்றும் குத்தகை இனம் | 2433.15 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணம் | 285.59 |
| 7 | பாதாள சாக்கடைக் கட்டணம் | 152.67 |
| | **மொத்தம்** | **5230.61** |

தொடர்ச்சி.,

**கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகம்**

| வ.எண் | வரியினம் | 2024-2025 ஆம் ஆண்டு வரை நிலுவைத்தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சொத்துவரி | 1135.81 |
| 2 | காலியிடவரி | 128.88 |
| 3 | தொழில்வரி | 322.85 |
| 4 | குடிநீர் கட்டணம் | 342.40 |
| 5 | கடை வாடகை மற்றும் குத்தகை இனம் | 75.40 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை பயன்பாட்டுக் கட்டணம் | 146.89 |
| 7 | பாதாள சாக்கடைக் கட்டணம் | 22.48 |
| | **மொத்தம்** | **2174.70** |

மேற்கண்ட விவரப்படி, நான்கு மண்டலங்களிலும் வரி மற்றும் வரியில்லா இனங்களில் 2024-2025 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ.175.66 கோடி நிலுவையாக உள்ளதால், நிலுவை மற்றும் நடப்புத்தொகையினை 100% வசூல் செய்யும் பொருட்டு, பேனர்கள் (விளம்பரத்தட்டிகள்) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஏப்ரல் 30-ஆம் தேதிக்குள் சொத்துவரி செலுத்தும் சொத்தின் உரிமைதாரர்களுக்கு நிகர சொத்துவரியில் 5% அல்லது அதிகபட்சம் ரூ.5000/- ஊக்கத்தொகை வழங்குவது குறித்து துண்டுப்பிரசுரம் மூலம் விளம்பரப்படுத்தவும், ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும், Bulk SMS மூலம் உரிமைதாரர்களுக்கு தெரியப்படுத்தவும், மற்றும் வழக்கு செலவினங்களுக்கும் சேர்த்து ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.10 இலட்சம் வழங்கிட மாமன்ற அனுமதி எதிர்நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : -

1) பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(அ1/6009/2025)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

4) சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கருங்கல்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல், சீலநாயக்கன்பட்டி புதன் சந்தை சுங்க கட்டண வசூல் மற்றும் மணியனூர் நவீன இறைச்சிகூடம் குகை அறுவை மனை மற்றும் அதனை சார்ந்த உட்புற வெளிப்புற கட்டண வசூல் மற்றும் ஜாரி கொண்டலாம்பட்டி அறுவை மனை சுங்க கட்டண வசூலுக்கு கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு 26.03.2025ந்தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கடையின் அமைவிடம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | அரசு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்ற தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கருங்கல்பட்டி நாளங்காடி சுங்க கட்டண வசூல் | (i) திரு.என்.ராஜசேகர் த/பெ ஜி.நாகராஜ் 73, கருங்கல்பட்டி எக்ஸ்டன்சன் தெரு, சேலம் -636006. | 43549 (மாதம்) | 45500 |
| | | (ii) திரு.பி.விஸ்வநாதன் த/பெ பழனிசாமி 67/108, களரம்பட்டி மெயின்ரோடு 4 கருங்கல்பட்டி சேலம் -6. | 43549 | 42000 |
| 2 | சீலநாயக்கன்பட்டி புதன் சந்தை சுங்க கட்டண வசூல் | (i) திரு.வி.மாது, த/பெ என் .வெங்கடாஜலம்., 38/12,அம்மையப்பன்தெரு, கிச்சிப்பாளையம் , சேலம்-636015. | 57881 | 100000 |
| | | (ii) திரு.ச.கோபிநாத் த/பெசண்முகம் 2/392, பெருமாள் கோவில்மேடு 9வது தெரு, சீலநாயக்கன்பட்டி சேலம் - 6. | 57881 | 81000 |
| | | (iii)திருமதி.பி..ரேவதித/பெ பாலசுப்ரமணியன் 6/356 மாருதி நகர், திருச்சி ரோடு, நாமக்கல் 637002. | 57881 | 151000 |
| 3 | மணியனூர் நவீன இறைச்சிகூடம் குகை அறுவை மனை மற்றும் அதனை சார்ந்த உட்புற வெளிப்புற கட்டண வசூல் மற்றும் ஜாரி கொண்டலாம்பட்டி அறுவை மனை சுங்க கட்டண வசூல் | (i) திரு-ஆர்.கார்த்திகேயன் த/பெ ரத்தினம், 81/18, மேட்டு வெள்ளாளர் தெரு, கொண்டலாம்பட்டிபைபாஸ், சேலம் -10 | 635040 | 666999 |

தொடர்ச்சி.,

அ. வரிசை எண் 1இல் கருங்கல்பட்டி நாளங்காடி சுங்கக்கட்டணத்திற்கு (i)திரு.என்.ராஜசேகர் என்பவர் உச்சக்கேள்வியாக ரூ.45500/- கோரியுள்ளார். (ii) திரு.பி..விஸ்வநாதன் என்பவர் ரூ.42000/- கோரியுள்ளார். மேற்படி, திரு.பி.விஸ்வநாதனை விட திரு.என்.ராஜசேகர் என்பவர் ரூ.3500/- அதிகமாக கோரியுள்ளார்.

ஆ. வரிசைஎண்.2இல் சீலநாயக்கன்பட்டி புதன் சந்தை சுங்க கட்டண வசூல் (i) திரு.வி.மாது என்பவர் ரூ.100000/- கோரியுள்ளார். (ii) திரு.ச.கோபிநாத் என்பவர் ரூ.81000/- கோரியுள்ளார். (iii) திருமதி. பி.ரேவதி என்பவர் உச்சக்கேள்வியாக ரூ.1,51000/- கோரியுள்ளார்.

இ. வரிசை எண்.3இல் மணியனூர் நவீன இறைச்சிகூடம் குகை அறுவை மனை மற்றும் அதனை சார்ந்த உட்புற வெளிப்புற கட்டண வசூல் மற்றும் ஜாரி கொண்டலாம்பட்டி அறுவை மனை சுங்க கட்டண வசூல் (i) திரு-ஆர்.கார்த்திகேயன் என்பவர் மட்டும் கலந்து கொண்டு உச்சகேள்வியாக ரூ. 666999/- கோரியுள்ளார்.

மேலும், மின்னனு குத்தகையில் எவரும் கோராத காரணத்தினால் பகிரங்க ஏலத்தில் கோரப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களான மேற்கண்ட வரிசை எண்.1-ல் கண்டுள்ள கருங்கல்பட்டி நாளங்காடி சுங்கக்கட்டணத்திற்கு திரு.என்.ராஜசேகர் என்பவர் ரூ.45500/-ம், வரிசைஎண்.2-இல் சீலநாயக்கன்பட்டி புதன் சந்தை சுங்க கட்டண வசூல் திருமதி. பி.ரேவதி என்பவர் ரூ.1,51,000/-ம் மற்றும் வரிசை எண்.3-இல் மணியனூர் நவீன இறைச்சிகூடம் குகை அறுவை மனை மற்றும் அதனை சார்ந்த உட்புற வெளிப்புற கட்டண வசூல் மற்றும் ஜாரி கொண்டலாம்பட்டி அறுவை மனை சுங்க கட்டண வசூல் திரு-ஆர்.கார்த்திகேயன் என்பவர் ரூ.666999/-ம் அரசு நிர்ணயித்த தொகையினைவிட கூடுதலாக கேட்டுக்கொண்டுள்ளார்கள். எனவே, அரசு மதிப்பை காட்டிலும் கூடுதலாக கோரப்பட்டுள்ள ஒப்பந்ததாரார்களின் ஒப்பந்தப்புள்ளிகளை 2016-2017 ஆண்டின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளுக்கு உட்படுத்தியும் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைக்க மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப் :-</u>

அ) அனுமதிக்கலாம்.

ஆ) மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்து மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

(எம்2/207/2019)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது.

5) சேலம் மாநகராட்சி நான்கு வார்டு அலுவலகங்களின் கட்டுபாட்டில் இயங்கி வந்த பொது சுகாதார வாகனங்கள் மற்றும் பொறியியல் வாகனங்கள் 15 வருடங்களுக்கு மேல் பயன்பாட்டிலிருந்து அதிகமான பராமரிப்பு செலவினங்கள் ஏற்பட்ட நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது,

தமிழ்நாடு அரசு உள்துறை (போக்குவரத்து) அரசாணை எண். 539 நாள்: 26.09.2024. மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ஆர்.ஓ.சி.எண் 1725/2022/எம்ஏ1, நாள்: 04.10.2024-இன் படி சேலம் மாநகராட்சியில் 15 வருடங்கள் முடிவடைந்த நிலையில் உள்ள வாகனங்கள் அனைத்தும் 30.09.2025 தேதி வரை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் மைய அலுவலகம் மற்றும் நான்கு வார்டு அலுவலகங்களின் கட்டுபாட்டில் இயங்கி வரும் மொத்தம் 11 எண்ணிக்கையிலான பொலிரோ வாகனங்கள் 15 வருடங்கள் முடிவடைந்த நிலையில் 30.09.2025-ஆம் தேதி வரை தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது கழிவு செய்யப்படவுள்ள அனைத்து வகையான வாகனங்களின் விபரங்கள் கீழ்காணும் விபரப்பட்டியலில் உள்ளது.

எனவே, சேலம் மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கழிவு செய்யப்படவுள்ள அனைத்து வகையான வாகனங்களுக்கான Stoppage Certificate பெற்றிடும் பணிகளுக்காக கடிதம் அனுப்பிடும் நடவடிக்கைகளுக்கும், மோட்டார் வாகனப் பராமரிப்பு துறை இணை இயக்குநர் சேலம், மற்றும் செயற்பொறியாளர் வேளாண் பொறியியல் துறை சேலம், ஆகிய துறைகளுக்கு உரிய விண்ணப்பங்கள் தயார் செய்து கழிவு செய்திடும் நடவடிக்கைகளுக்கும், மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து (எச்2) துறை அரசாணை எண். 51 நாள்: 06.05.2019-இன் படி அரசு நிறுவன இணையதளத்தின் MSTC (METAL SCRAP TRADE CORPORATION LIMITED) மூலம் ஏல நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மற்றும் வாகன கழிவு செய்திடும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

தொடர்ச்சி.,

<u>விபரப்பட்டியல்</u>

| SL.No. | Type of Vehicle | Registration Number | Model | Fifteen Year Completed and Stopped |
|---|---|---|---|---|
| 1 | Tractor &Trailer | TN27H1561 | 1997 | **Stopped** |
| 2 | Tractor &Trailer | TN27H0709 | 1997 | **Stopped** |
| 3 | Tractor &Trailer | TN27H0711 | 1997 | **Stopped** |
| 4 | Tractor &Trailer | TN27H0758 | 1997 | **Stopped** |
| 5 | Tractor &Trailer | TN27H0811 | 1997 | **Stopped** |
| 6 | Tractor &Trailer | TN27H1726 | 1997 | **Stopped** |
| 7 | Tractor &Trailer | TN27H1560 | 1997 | **Stopped** |
| 8 | Tractor &Trailer | TN27H0812 | 1997 | **Stopped** |
| 9 | Tractor &Trailer | TN27H0761 | 1997 | **Stopped** |
| 10 | Tractor &Trailer | TN27H0530 | 1997 | **Stopped** |
| 11 | Eicher Tipper | TN30K3628 | 2005 | **Stopped** |
| 12 | Eicher Tipper | TN30K3649 | 2005 | **Stopped** |
| 13 | Eicher Tipper | TN30K3618 | 2005 | **Stopped** |
| 14 | Eicher Dumper Placer | TN30H6816 | 2005 | **Stopped** |
| 15 | Eicher Dumper Placer | TN30H6814 | 2005 | **Stopped** |
| 16 | Water Leakage Deduction Vehicle | TN30AE8100 | 2009 | **Stopped** |
| 17 | Tanker | TCS1865 | 1985 | **Stopped** |

<u>அலுவலகக்குறிப் :</u>

அனுமதிக்கலாம்.

(இ1/0478/2018)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

6) சேலம் மாநகராட்சி, நான்கு வார்டு அலுவலகங்களின் பொது சுகாதார பணிகளுக்கு பவானி நகராட்சிக்கு சொந்தமான மற்றும் நான்கு வருடங்களாக பயன்பாட்டில் இல்லாத நிலையில் உள்ள புதியதாக வாங்கி ஏழு வருடங்கள் மட்டுமே ஆன ஒரு காம்பேக்டர் வாகனம் மற்றும் 45 எஸ்.எஸ் பின்கள்-யும் பயன்படுத்தி கொள்வதற்காக பவானி நகராட்சி அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது,

இந்நிலையில் சேலம் மாநகராட்சிக்கு கிடைக்க பெற்ற, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ஆர்.ஓ.சி.எண் 8545/2025/எஸ்.பி.எம்1, நாள்: 15.04.2025-இல் பவானி நகராட்சிக்கு சொந்தமான ஒரு காம்பேக்டர் வாகனம் எண் TN36AR3744-யும் மற்றும் 45 எஸ்.எஸ் பின்கள்-யும் சேலம் மாநகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இம்மாநகராட்சியில் நான்கு வார்டு அலுவலகங்களின் பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்வது, மற்றும் காம்பேக்டர் வாகனத்தின் பழுதுப்பணிகள் நிவர்த்தி செய்து வாகனம் தகுதி காண் சான்று புதுப்பித்து வாகனம் தொடரியக்கம் உறுதி செய்து தரும் நடவடிக்கைகள் மேற்கொள்வது, மற்றும் 45 எஸ்.எஸ் பின்களின் பழுதுகள் நீக்கி புதிய வர்ணங்கள் பூசி புதிய பின்களாக புதுப்பித்து தரும் நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆகிய அனைத்து நடவடிக்கைகளுக்கு ஆகும் செலவினத்தினை மேற்கொள்வது போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப் :-</u>

அனுமதிக்கலாம்.

(இ8/5777/2025)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

7) சேலம் மாநகராட்சி 2022–23 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ், அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண். 7–இல் ஏழுமலை நகர் பகுதியில் மழைநீர்வடிகால், சிறுபாலம் மற்றும் தார்சாலை அமைக்கும் பணியினை 2022–23 ஆம் ஆண்டு செந்தார விலைவிகித பட்டியல்படி தொழில்நுட்ப அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 37.20/– இலட்சத்தில் மேற்கொள்ள மன்றம் தனது 28.02.2023ஆம் தேதி 864 எண் கொண்ட தீர்மானத்தில் நிர்வாக அனுமதி அளித்ததின் பேரில், முதல் முறையாக 24.03.2023ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் (L1) ஒப்பந்ததாரர் மெசர்ஸ். கணேசன் கான்ட்ராக்ட் கம்பெனி என்ற நிறுவனத்தினர் மதிப்பீட்டை விட 0.03% (31,15,807/–) குறைவு என குறித்து கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் தனது 27.04.2023ஆம் தேதி 22 எண் கொண்ட தீர்மனத்தில் அனுமதி அளித்ததின் பேரில் பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி பணி மேற்கொள்ளும் போது கீழ்கண்டுள்ளவாறு அப்போதைய இடத்தின் தன்மைக்கேற்ப

மூல மதிப்பீட்டில் உள்ள சில இனங்களின் அளவுகள் கூடுதலாக சேர்த்தும்,

சில இனங்களின் அளவுகள் குறைத்தும், மூல மதிப்பீட்டில் இல்லாத ஒரு புதிய இனத்தை கூடுதலாக சேர்த்தும் பணியை நிறைவேற்றிட ஒப்பந்ததாரர் மெசர்ஸ்.கணேசன்கான்ட்ராக்ட் கம்பெனி என்ற நிறுவனத்தினர் ஏற்கனவே 0.20% குறைவு ஒப்பந்தத் தொகையிலேயே பணியினைசெய்து முடிக்கப்பட்டது.

<u>மதிப்பீட்டில் உள்ள இனங்கள்</u>

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு அளவு | கூடுதல் அளவு | கூடுதல் செலவு தொகை |
|---|---|---|---|---|
| 1 | Supplying and errectingcentering to sides and soffits including supports and strutting | | | |
| | a). Drain works above 1m Height | 34.00 | 32.59 | 27422.76 |
| 2 | Reinforced cement concrete 1:1½:3 mix (One cement one and half CS sand three aggregate) using 20mm ISS gauge HBBG metal | 6.00 | 14.92 | 126140.90 |
| 3 | Supply and fabrication and placing in position of TMT steel roads to required size and length | 600.00 | 877.58 | 78254.62 |
| 4 | Preparing the Existing surface to laying the road to Proper Gradient and remove the loose soil without damage the Water Supply | 252.00 | 18.08 | 2095.64 |
| 5 | Providing and laying 50 mm compacted thick bituminous macadam using 0.42 cum of 26.5-11.2 mm graded metal, 0.10 cum | 63.00 | 46.16 | 455993.44 |
| 6 | Providing and laying Bituminous concrete to 30/40mm thick using 0.13 cum of 19.00-9.50 mm graded metal | 38.00 | 57.23 | 586283.81 |
| | | Sub – Total : Rs. | | **1276191.17** |

தொடர்ச்சி.,

| மதிப்பீட்டில் இல்லாத இனம் | | | | |
|---|---|---|---|---|
| 7 | Providing and laying tack coat of 2 kgs/10 sqm over the BT surface treated with binder using 2 kgs of bituminous Emulsion (RS1) for 10 square meter area | | 1008.42 | 24797.05 |
| | | Sub – Total : Rs | | **24797.05** |
| | | **மொத்தம் : ரூ** | | **1300988.22** |

பணியின்அவசியம் மற்றும் அவசரம் கருதி மேற்படியான பணியினை மேற்கொள்ளப்பட்டதற்கும், ஒப்பந்ததாரருக்கு செலவினத் தொகை வழங்கிடவும் மன்றத்தின் பின்னேற்பு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(இ8/ம.எண். 247டி /2022–23)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**8)** சேலம் மாநகராட்சி **2022–23** ஆம் ஆண்டு பள்ளி மேம்பாடு மானிய நிதியின் கீழ் அஸ்தம்பட்டி மண்டலம் கோட்டம் எண் **5** இல் அழகாபுரம் புதூர் பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் **2** கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டும் பணிக்கு **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதப்படி தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**35.00** இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். **6002 / 2002 / SS 2** நாள்: **25–10–2023** இல் நிர்வாக அனுமதி வழங்கியதின் பேரில், மேற்படி பணிக்கு **27–12–2023** இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு **0.09%** குறைவு என வரப்பெற்ற M/s Ganesan Contract Company, சேலம். அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**29,36,580.45/–**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளப்பட்டு, சேலம் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண். **560**, நாள் **31–01–2024** இல் அனுமதிக்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி பணி மேற்கொள்ளும்போது பணிதளத்தில் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மற்றும் மாநகர பொறியாளர் அவர்களின் அறிவுரையின் படி பணிதளத்தின் தன்மைக்கேற்ப மதிப்பீட்டில் இல்லாத சில இனங்கள் புதியதாக மேற்கொள்ள வேண்டியும் இருந்தது. அவ்வாறு புதியதாக பணி மேற்கொள்ளப்பட வேண்டிய இனங்களுக்கு ஒப்பந்தத்தில் (BOQ) விலைவிகிதம் இல்லாததால் தமிழ்நாடு பொதுப்பணித்துறை செந்தார விலைவிகிதப்பட்டியலில் (SOR 2023-24 உள்ள இனங்களின் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்த விபரம் பின்வருமாறு

**தொடர்ச்சி.,**

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : (BOQ)**

| வ. எண் | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | Earth work excavation for foundation in hard stiff clay, stiff black cotton, hard red earth, shalesmurams and ordinary gravel and hard | | | | | |
| | a). Narrow Foundation | 12.00 | 1886.16 | 51.66 | 8110.62 | 6224.46 |
| | b). Open Excavation | 3.00 | 353.67 | 117.50 | 688.55 | 334.88 |
| 2 | Collection,supply and filling of CS sand from approved quarry to work site and stocking to the Departmental gauge for premeasurement | 4.00 | 6200.68 | 1555.00 | 18832.50 | 12631.82 |
| 3 | Plain cement concrete 1:4:8 mix (One cement four sand and eight aggregate) using 40mm size ISS gauge HBBG metal including mixing, | 4.00 | 19812.80 | 4953.00 | 80634.84 | 60822.04 |
| 4 | Supplying and erecting centring to sides and soffits including supports and strutting for drainage sides and culvert body wall sides | | | | | |
| | a). Square Columns | 87.00 | 102635.64 | 124.50 | 146847.75 | 44212.11 |
| | b). Grade Beam | 15.00 | 6616.50 | 68.29 | 30115.89 | 23499.39 |
| 5 | Supplying and fabricating and placing in position MS (or) R.T.S. bar for reinforcement to all. | 4950.00 | 447480.00 | 6003.71 | 540333.90 | 92853.90 |
| 6 | Reinforced cement concrete 1:1½:3 mix (One cement one and half CS sand three aggregate) using 20mm ISS gauge HBBG metal from the | | | | | |
| | a). Foundation & Basement | 5.00 | 42371.75 | 27.86 | 236085.64 | 193713.89 |
| | b). Ground Floor | 5.00 | 43000.95 | 27.19 | 233834.00 | 190833.05 |
| 7 | Brick work in cement mortar 1:5 mix using Fly Ash bricks of 230x110x70mm (8 3/4" x 41/4" x 23/4") from approved quarry including cost and | | | | | |
| | b). Ground Floor | 7.00 | 45439.87 | 26.04 | 169025.64 | 123585.77 |

தொடர்ச்சி.,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | Collection,supply and filling of Well gravel from approved quarry to work site and stocking to the Departmental gauge for premeasurement | 20.00 | 6337.20 | 68.22 | 21591.63 | 15254.43 |
| 9 | Painting two coats with best synthetic enamel paint of approved Colour for new iron works the rate is inclusive of all materials, brushes and | 22.00 | 3145.34 | 39.45 | 5621.63 | 2476.29 |
| 10 | Painting with black board paint two coats etc., complete complying with standard specification | 12.00 | 2075.04 | 37.68 | 6499.80 | 4424.76 |
| 11 | Wiring with 2 x 1.5 sqmm (22 / 0.3) PVC insulated SC unsheathedCu. Conductor of 1100V grade in suitable PVC rigid pipe concealed light point / Fan point (For electronic regulator). (SD-24) | 16.00 | 43584.00 | 26.00 | 70824.00 | 27240.00 |
| 12 | Wiring with 2x4 sqmm(56/0.3) PVC insulated SC unsheathed Cu.Conductor cable of 1100V grade in suitable pipe on wall and ceiling for open PVC power plug point. (SD-39) | 2.00 | 3030.00 | 8.00 | 12120.00 | 9090.00 |
| 13 | Supply and fixing of single box type 4'x18w crystal glass LED Tube light with SD-88) | 10.00 | 6450.00 | 18.00 | 11610.00 | 5160.00 |
| 14 | Supply and fixing of 1200 mm (48") AC ceiling fan complete with stepped electronic 300W regulator with 1meter down rod on the existing clamp. (SD-107) | 6.00 | 14058.00 | 8.00 | 18744.00 | 4686.00 |
| | **II மதிப்பீட்டில் இல்லாத இனங்கள் (SOR)** | | | | | |
| 15 | Fabricating Supply and fixing and position of MS doors with double leave made out of 18 gauge M.S. sheet, outer frame 35x35x5mm | | | 5.16 | 14023.02 | 14023.02 |
| 16 | Manufacturing,supplying& fixing in position Steel windows of MS sheet 20 gauge thick with openable shutter frame and shutter frame made out of steel section confirming to IS | | | 9.79 | 31654.59 | 31654.59 |
| 17 | Paving the floor with best quality Double charged vertified tiles 600 x 600 x 8mm of approved colour shade and quality laid in | | | 92.47 | 136473.70 | 136473.70 |

தொடர்ச்சி.,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 18 | Dadooing walls with following best approved quality ,white/colour glazed tiles of size 300mm x 450mm x 8mm set in cement mortor 1:2 (one | | | 134.04 | 190848.83 | 190848.83 |
| 19 | Supplying and fixing of Cudappa slab of 50mm thick for Cupboard including cost of materials and labour etc complete | | | 16.45 | 6385.07 | 6385.07 |
| | **Quotation Items :** | | | | | |
| 20 | Supplying and Delivery of the Following furniture's | | | | | |
| | Writing Chair | | | 30.00 | 145500.00 | 145500.00 |
| | Executive Table | | | 2.00 | 55200.00 | 55200.00 |
| | Executive Chair | | | 2.00 | 37120.00 | 37120.00 |
| | Air - Coolar | | | 2.00 | 30800.00 | 30800.00 |
| | | | 794477.60 | | 2259525.6 | 1465048.00 |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023–2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்திலும், மதிப்பீட்டில் இல்லாத புதிய இனங்கள் பொது பணித்துறையின் **2023–24** ஆம் ஆண்டு செந்தார விலை விகிதத்திலும் பணிகள் செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Ganesan Contract Company, சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**35.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No.172 /B/ 2023 –2024)**

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**9)** சேலம் மாநகராட்சி **2024–25**ஆம் ஆண்டு குடிநீர் நிதியின்கீழ், கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.**51** மற்றும் **52** பகுதிகளில் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்தும் பணியை மதிப்பீடு தொகை ரூ.**45.00/–** இலட்சத்தில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் 10.03.2025ம் தேதி வழங்கிய நிர்வாக அனுமதியின்பேரில் 26.03.2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப் பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை .ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1. | **M/s. Shiva Engineering Work, Mecheri (L 1)** | ரூ.37,79,451/– | 0.35 % மதிப்பீட்டைவிட அதிகம் | eProcurement Ref No.6353211276295, ரூ.45,000/–, State Bank.of India. |
| 2. | M/s. Venkatesan, Salem (L 2) | ரூ.39,12,058/– | 3.88 % மதிப்பீட்டை விட அதிகம் | eProcurement Ref No.6353211278198, ரூ.45,000/–, State Bank.of India. |

மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள **M/s.Shiva Engineering Work**, Mecheri (L1) என்ற ஒப்பந்ததாரர் ரூ.37,79,451/– என மதிப்பீட்டைவிட 0.35% அதிகமாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் மீது இவ்வலுவலக **01.04.2025**ம் தேதிய அறிவிப்பில் ஒப்பந்தபுள்ளியின் மீது விலை குறைப்பு (Negotiation) செய்து தருமாறு ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி கடிதத்தை தொடர்ந்து, **07.04.2025**ம் தேதிய கடிதத்தில் அதிகம் வழங்கப்பட்ட மதிப்பீடு தொகை **0.35%** (ரூ.37,79,451/–)ல் இருந்து விலை குறைத்து (ரூ.37,65,433/–) 0.02% வழங்க சம்மதிக்கிறேன் என **M/s.Shiva Engineering Work**, Mecheri ஒப்பந்ததாரர் கடிதம் வழங்கியுள்ளார்.

**07.04.2025**ம் தேதி விலை குறைப்பு கடிதத்திற்கு பின் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் பின்வருமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | 07.04.2025ம் தேதி விலை குறைப்பு கடிதத்திற்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சதவீதம் | 07.04.2025ம் தேதி விலை குறைப்பு கடிதத்திற்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகை மற்றும் சதவீதம் |
|---|---|---|---|
| 1 | **M/s.Shiva Engineering Work, Mecheri (L 1)** | ரூ.37,79,451/– 0.35 % மதிப்பீட்டை விட அதிகம் | ரூ.37,65,433/– 0.02 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | M/s. Venkatesan, Salem (L 2) | ரூ.39,12,058/– 3.88 % மதிப்பீட்டை விட அதிகம் | ரூ.39,12,058/– 3.88 % மதிப்பீட்டை விட அதிகம் |

தொடர்ச்சி.,

மதிப்பீடு தொகையைவிட (ரூ.37,65,433/-) (0.02%) விலை குறைத்து வழங்கியுள்ள ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம்.

பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s.Shiva Engineering Work, Mecheri ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பின்னேற்பிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

(இ2/ம.எண்.634 /கு.நீ/2024-25)
தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

10) சேலம் மாநகராட்சி 2024-25 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், சேலம்-மேட்டூர் நங்கவள்ளி குடிநீர் திட்டம் கருமலைக்கூடல் Booster Station-ல் 4வது பம்பில் பழுது ஏற்பட்டுள்ளதை சரி செய்தல் மற்றும் Transformer-1ற்கு செல்லும் கேபிள் மற்றும் Termination-ஐ மாற்றித்தரும் பணியினை மதிப்பீடு தொகை ரூ.4.40/- இலட்சத்தில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் 10.02.2025ம் தேதி வழங்கிய நிர்வாக அனுமதியின் பேரில் முதன் முறையாக 13.03.2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை .ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1. | **M/s. Natesan Engineering Contractor, Salem (L 1)** | ரூ.3,69,100/- | 1.01 % மதிப்பீட்டைவிட குறைவு | eProcurement Ref No.6320671267341, ரூ.4400/-, State Bank.of India. |
| 2. | M/s. VS Construction, Salem (L 2) | ரூ.4,14,255/- | 11.10 % மதிப்பீட்டை விட அதிகம் | eProcurement Ref No.6320671270040, ரூ.4400/-, State Bank.of India. |

மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. Natesan Engineering, Salem, (L1) என்ற ஒப்பந்ததாரர் ரூ.3,69,100/- என மதிப்பீட்டை விட 1.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/ம.எண். 65/கு.நீ/2024-25)
தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

11) சேலம் மாநகராட்சி 2024-25 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ், சேலம்-மேட்டூர் நங்கவள்ளி குடிநீர் திட்டம் 450மிமீ விட்டமுள்ள பிரதான குழாயில் மாரியம்மன் காட்டு வளவு பகுதியில் உடைப்பு ஏற்பட்டுள்ளது மற்றும் மாமரத்துக்காடு வீரக்கல் பகுதியில் உள்ள 100 மிமீ ஏர் வால்வு உடைப்பு ஏற்பட்டுள்ளதை சரி செய்தல் மற்றும் கோம்புரான்காடு நீர் உந்து நிலையத்திற்கு 50KVAR மின் கெபாசிடர் சப்ளை செய்தல், VFD பராமரிப்பு ஆகிய பணிகளை மதிப்பீடு தொகை ரூ.3.60/-இலட்சத்தில் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் 03.02.2025ம் தேதி வழங்கிய நிர்வாக அனுமதியின் பேரில் முதன் முறையாக 13.03.2025ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் பின்வருமாறு:

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை .ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் | வைப்புத்தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| 1. | **M/s. Shree Sai Constructions, Salem (L 1)** | ரூ.3,00,172/- | 0.20 % மதிப்பீட்டைவிட குறைவு | eProcurement Ref No.6348261275886, ரூ.3600/-, State Bank.of India. |
| 2. | M/s. KSP Construction, Salem (L 2) | ரூ.3,12,804/- | 4.00 % மதிப்பீட்டை விட அதிகம் | eProcurement Ref No.6309601269206, ரூ.3600/-, State Bank.of India. |

மேற்காணும் வரிசை எண்.1ல் கண்டுள்ள M/s. Shree Sai Construction, Salem, (L1) என்ற ஒப்பந்ததாரர் ரூ.3,00,172/- என மதிப்பீட்டை விட 0.20% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/ம.எண். 64/கு.நீ/2024-25)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

12) சேலம் மாநகராட்சியின், 2025–26 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை மாமன்றத்தில் தாக்கல் செய்யும் நாளன்று மாநகராட்சி அலுவலக வளாகத்தில் 3 இடங்களில் LED ஸ்கிரீன் அமைத்து, ஆடியோ, வீடியோ மிக்சிங் பணி மற்றும் நுழைவாயில் முதல் மாமன்ற கூட்டம் நடைபெறும் கூடம் வரை பூ அலங்கார வேலைகளை செய்யும் பணிக்கு ந.க.எண். பி1/23289/2024 எண்ணிட்ட 03.02.2025 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி 06.02.2025 அன்று வரப்பெற்ற மூன்று எண்ணிக்கையிலான விலைப்புள்ளிகளின் விபரங்கள் கீழ் கண்டுள்ளவாறு,

| வ. எண். | பணி விபரம் | திருவாளர்கள் ரவி வீடியோ ஸ்டுடியோ, 4/81, இண்டேன் நகர், ஜாகீர்ரெட்டிப்பட்டி, சேலம் – 636302. | திருவாளர்கள் நியூ பிரியா டிஜிட்டல் வீடியோஸ், 186/3, சாரதா கல்லூரி பிரதான வாயில் எதிரில், சாரதா கல்லூரி ரோடு, சேலம் –16. | திருவாளர்கள் சிவா வீடியோ விஷன், 102/36, ஏ, பல்லவன் ரோடு, வித்யா நகர், 8வது கிராஸ், அம்மாப்பேட்டை, சேலம் – 636003. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | சேலம் மாநகராட்சி அலுவலக வளாகத்திற்குள் 3 இடங்களில் LED ஸ்கிரீன் அமைத்து ஆடியோ, புகைப்படம், வீடியோ மிக்சிங் அமைத்தல் மற்றும் நுழைவாயில் முதல் மாமன்ற கூட்ட அரங்கம் வரை சிவப்பு கம்பள வரவேற்பு, அலங்கார பணிகள், மலர்களால் அலங்கரிக்கும் பணிகள், மற்றும் பொக்கே – 2. | ரூ. 3,27,700/– + 18 % GST | ரூ. 3,88,000/– + 18 % GST | ரூ. 3,53,000/– + 18 % GST |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி கலம் எண். 3ல் கண்டுள்ள திருவாளர்கள் ரவி வீடியோ ஸ்டுடியோ, 4/81, இண்டேன் நகர், ஜாகீர்ரெட்டிப்பட்டி, சேலம் – 636302 நிறுவனத்தின் விலைப்புள்ளி கலம் எண். 4 மற்றும் 5ல் கண்டுள்ள மற்ற இரண்டு விலைப்புள்ளிகளைக் காட்டிலும் குறைவாக உள்ளதை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1 மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2 மேற்காணும் பணிக்கான செலவினத்தை 2025–26 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(பி1/23289/2024)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

13) 2024-2025 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை மன்றத்தில் தாக்கல் செய்யும் பொருட்டு மாமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு கையேடு, ரெக்சின் பை மற்றும் பேனா ஆகியவை வழங்குவதற்காக விநியோகிக்க ந.க.எண். பி1/23289/2024 எண்ணிட்ட 03.02.2025 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி 06.02.2025 அன்று வரப்பெற்ற மூன்று எண்ணிக்கையிலான விலைப்புள்ளிகள் விபரங்கள் கீழ்கண்டுள்ளவாறு

| வ. எண். | பணி விபரம் | மெசர்ஸ். ஸ்ரீ பச்சியம்மன் பிரிண்டார்ஸ், ஜாகீர் அம்மாபாளையம், சேலம்.636302. | மெசர்ஸ். வெங்கடேஷ் கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர், சேலம்.9 | திரு. சரவணன், 19/7, பெரிய கிணறு தெரு, சாமிநாதபுரம், சேலம்-636009. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 200 பக்கங்கள் கொண்ட கையேடு - 200 எண்ணிக்கைகள் | ரூ. 350/- | ரூ. 300/- | ரூ. 240/- |
| 2. | ரெக்சின் பை - 200 எண்ணிக்கைகள் | ரூ. 730/- | ரூ. 680/- | ரூ. 650/- |
| 3. | பேனா - 200 எண்ணிக்கைகள் | ரூ.90/- | ரூ. 80/- | ரூ. 70/- |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி கலம் எண். 5ல் கண்டுள்ள திரு.சரவணன், 19/7, பெரிய கிணறு தெரு, சாமிநாதபுரம், சேலம்-636009 என்பவரின் விலைப்புள்ளி கலம் எண். 3 மற்றும் 4ல் கண்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளைக் காட்டிலும் குறைவாக உள்ளதை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1 மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2 மேற்காணும் பணிக்கான செலவினத்தை 2025-26 ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(பி1/23289/2024)

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

**14)** சேலம் மாநகராட்சியின், **2024–2025** ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு மற்றும் **2025–26** ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்ய அறிக்கையினை புத்தக வடிவில் தயார் செய்து விநியோகிக்க ந.க.எண். பி**1/23289/2024** எண்ணிட்ட **03.02.2025** அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி **06.02.2025** அன்று வரப்பெற்ற மூன்று எண்ணிக்கையிலான விலைப்புள்ளிகள் விபரங்கள் கீழ்கண்டுள்ளவாறு

| வ. எண். | பணி விபரம் | மெசர்ஸ். ஸ்ரீ பச்சியம்மன் பிரிண்டர்ஸ், ஜாகீர் அம்மாபாளையம், சேலம்.636302. | மெசர்ஸ். வெங்கடேஷ் கம்ப்யூட்டர் ஆப்செட் பிரிண்டர், சேலம்.9 | திரு. சரவணன், 19/7, பெரிய கிணறு தெரு, சாமிநாதபுரம், சேலம்–636009. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 2025–2026 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கைப் புத்தகம் மல்டி கலரில் அச்சிடல் – (உத்தேசமாக 100 பக்கங்கள்) – 240 எண்ணிக்கைகள் | ரூ. 990/– (ஒன்றின் விலை) 240 X 990 = ரூ.2,37,600/– | ரூ. 960/– (ஒன்றின் விலை) 240 X 960 = ரூ.2,30,400/– | ரூ. 940/– (ஒன்றின் விலை) 240 X 940 = ரூ.2,25,600/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின்படி கலம் எண். **5**ல் கண்டுள்ள திரு.சரவணன், **19/7**, பெரிய கிணறு தெரு, சாமிநாதபுரம், சேலம்–**636009** என்பவரின் விலைப்புள்ளியான ரூ. **940/–** (ஒன்றின் விலை) கலம் எண். **3** மற்றும் **4**ல் கண்டுள்ள இரண்டு விலைப்புள்ளிகளைக் காட்டிலும் குறைவாக உள்ளதை ஏற்று மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1 மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2 மேற்காணும் பணிக்கான செலவினத்தை **2025–26** ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.

(பி1/23289/2024)

**தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.**

15) சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்கு சம்பந்தப்பட்ட கோட்டம் எண் 32 இல் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள வ.உ.சி தினசரி நாளங்காடியில் சுங்க கட்டண வசூல் செய்ய மூன்று சிப்பங்களாக பிரித்து 01.11.2023 ஆம் தேதியில் பொது ஏலம்/டெண்டர் விடப்பட்டது. மாமன்ற தீர்மான எண் 523 நாள் : 26.12.2023 இல் சிப்பம் 2 ற்கு திரு.கே.ஜி.லோகநாதன் என்பவர் உச்சப்பட்ச ஏலத்தொகையாக ரூ 7,07,00,000 /- யினையும் சிப்பம் 3 ற்கு திரு. வெங்கடேசன் த/பெ. கோவிந்தசாமி என்பவர் கோரிய உச்சப்பட்ச ஏலத்தொகையாக ரூ. 2,01,00,000 /- யினையும் ஒப்பந்தங்களாக கோரியதினை ஏற்று ஏலம் மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.

சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை வார்டு அலுவலக உதவி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவின்படி பொது ஏலச் சிறப்பு கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்ட வ.உ.சி. நாளங்காடியில் சிப்பம் 2 மற்றும் 3 ற்கு சுங்க கட்டண வசூல் இனத்திற்கு திரு.கே.ஜி.லோகநாதன் மற்றும் திரு. வெங்கடேசன் ஆகியோர்களுக்கு உரிமம் வழங்கி உத்திரவிடப்பட்டு. அம்மாபேட்டை வார்டு அலுவலக வருவாய் ஆய்வாளர் (சி) அவர்களால் 01.03.2024 ஆம் தேதியில் உரிமையாணை சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது. அதன்படி, மேற்படி குத்தகை இனத்தின் உரிம காலம் 01.03.2024 முதல் 28.02.2025 ஆம் தேதியில் உரிம காலம் முடிவடைந்தது.

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்:78 நாள்: 25.05.2009இன்படி 01.03.2025 முதல் 28.02.2026 வரையிலான காலத்திற்கு மற்றும் தொடர்ந்து குத்தகையினை நடத்துவதாக இருந்தால் ரூ.100/- மதிப்புள்ள பத்திரத்தில் நோட்டரி வழக்கறிஞரிடம் கையொப்பம் பெற்று வழங்குமாறும் மற்றும் 5 சதவிகிதம் குத்தகை தொகை உயர்வு செய்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட ஏலதாரரிடம் விருப்பக் கடிதம் வழங்கவும், இதற்கான கீழ்கண்ட குத்தகை தொகையினையும் செலுத்துமாறும் 09.01.2025, 21.01.2025, 24.01.2025 தேதியன்று பதிவு அஞ்சல் வாயிலாக அறிவிப்பு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டது.

| வ.எண் | குத்தகை இனத்தின் பெயர் | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்) | 01.03.2024 முதல் 28.02.2025 வரையுள்ள ஆண்டு குத்தகை தொகை ரூ. | 01.03.2025 முதல் 28.02.2026 வரை ஆண்டு குத்தகை 5 சதவிகிதம் உயர்வு ரூ. |
|---|---|---|---|---|
| 1 | வ.உ.சி. நாளங்காடி சிப்பம் 2 | கே.ஜி.லோகநாதன் | 7,07,00,000 /- | 7,42,35,000 /- |
| 2 | வ.உ.சி. நாளங்காடி சிப்பம் 3 | வெங்கடேசன் த/பெ. கோவிந்தசாமி | 2,01,00,000 /- | 2,11,05,000 /- |

தொடர்ச்சி.,

மேற்படி வ.உ.சி. தினசரி நாளங்காடி சிப்பம் 3ற்கு சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் திரு. வெங்கடேசன் த/பெ. கோவிந்தசாமி அரசாணை நிலை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 25.05.2009 இன் படி குத்தகை தொகை 5 சதவிகிதம் உயர்வு செய்து புதுப்பித்து கொள்ள விருப்பக் கடிதமும் ரூ.100/- மதிப்புள்ள பத்திரத்தில் நோட்டரி வழக்கறிஞரிடம் கையொப்பம் பெற்று வழங்கினார். பிறகு குத்தகை புதுப்பித்துக்கொள்ள சிப்பம் 2 ற்கு சம்மந்தப்பட்ட குத்தகைதாரர் திரு. கே.ஜி.லோகநாதன் என்பவர் விருப்ப கடிதம் வழங்காமல் கோரிக்கை மனு அனுப்பி உள்ளார் மேற்படி மனுவிற்கு 20.02.2025 ஆம் தேதியில் பதில் வழங்கப்பட்டுள்ளது.

எனவே இந்நேர்வில் சிப்பம் 1 இல் உள்ள கறி மார்கெட் அறுவைமனை நீங்கலாக கட்டண கழிப்பிடம் மற்றும் பார்க்கிங் ஆகியவை ஏற்கனவே துறைரீதியான வசூல் நடைபெற்றுவருகிறது. மேலும் சிப்பம் 2 ற்கு 2025-2026ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 7,42,35,000 /- மற்றும் சிப்பம் 3 ற்கு 2025-2026ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 2,11,05,000 /- ஆகமொத்தம் தொகை ரூ.95340000/- செலுத்த வேண்டியுள்ளது. சிப்பம் 2 மற்றும் 3 ற்கு இன்னும் 2 ஆண்டுகள் சுங்க கட்டணம் வசூல் செய்வதற்கான கால அவகாசம் உள்ளதால் மூன்று அறிவிப்புகள் பதிவஞ்சலில் அனுப்பியும் இன்னும் 2025 - 2026 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டு குத்தகை தொகை செலுத்தாததால் மாமன்ற தீர்மானம் எண்.765, நாள்.25.02.2025ன்படி அவர்கள் ஓராண்டு முடியும் காலமான 28.02.2025 ஆம் தேதிக்குள் 5 சதவிகித கூடுதல் தொகையுடன் கூடிய மேற்கண்ட முழுத் தொகையும் செலுத்தினால் சிப்பம் 2 ஐ திரு.கே.ஜி.லோகநாதன் என்பவர் பெயரிலும் சிப்பம் 3 ஐ திரு.வெங்கடேசன் என்பவர் பெயரிலும் புதுப்பிப்பு செய்வது எனவும் தவறும் பட்சத்தில் மேற்கண்ட இரண்டு ஒப்பந்தங்களையும் இரத்து செய்து விட்டு புதிய இ - டெண்டர் கோரப்படும் எனவும் மேலும் மேற்கண்ட இரண்டு சிப்பங்கள் ஏலம் போகும் வரை 12ல் ஒருபாகம் செலுத்தினால் ஒரு மாதம் மட்டும் அனுமதிப்பது அல்லது துறை ரீதியான வசூல் மேற்கொள்ளலாம் எனவும் மேற்படி வசூலில் இழப்புகள் ஏதும் ஏற்படும் பட்சத்தில் தற்போதைய ஏலதாரர்களின் வைப்புத் தொகை மற்றும் சால்வன்சி சான்று அடிப்படையிலான சொத்தின் மீது நடவடிக்கை மேற்கொண்டு சரிகட்டப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தொடர்ச்சி.,

மேற்கண்ட தீர்மானத்தின் அடிப்படையில் திரு.கே.ஜி.லோகநாதன் என்பவர் மார்ச் 2025 ஆம் மாதத்திற்குரிய தொகையான ரூ.61,86,250 /- மட்டுமே செலுத்தியுள்ளார். எனவே ஏல நிபந்தனையின்படி ஓராண்டு உரிமம் புதுப்பிக்க முன்வராததால் ஒப்படைப்பு விதிமீறல் இனமாக கருத்திற்கொண்டு மறு ஏலத்திற்கு விளம்பரம் செய்ய முடிவு செய்யப்பட்டது. மேலும் சிப்பம் 3ஐ ஏலம் எடுத்துள்ள திரு.ஜி.வெங்கடேசன் என்பவர் மனுவில் சுங்கக் கட்டண உரிமத்தை புதுப்பித்துக் கொள்வதாக தெரிவித்ததன் அடிப்படையில் சிப்பம் 3 ஐ தவிர சிப்பம் 1 மற்றும் 2ஐ பொது மற்றும் மின்ணணு ஏலம் வைக்க விளம்பரம் செய்யப்பட்டு 17.04.2025 அன்று ஏலம்/மின்னனு ஏலம் நடத்தப்பட்டது. அதற்கு பின்வருமாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | உரிமையாணையின் பெயர் | அரசு மதிப்பீடு ரூ. | மின்னனு ஒப்பந்தப்புள்ளி விவரம் | பொது ஏலம் கோரிய ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்ததாரர் கோரிய தொகை ரூ. | அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | சிப்பம் 1-<br>1.ஆடு அறுக்கும் தொட்டி-1<br>2.தரை தளம் இறைச்சி கடைகள் -6<br>3.முதல் தளம் இறைச்சி கடைகள்- 27<br>4.இரண்டாம் தளம் இரண்டு வைப்பு அறைகள்<br>5..தரை கீழ் தளத்தில் வாகனம் நிறுத்தும் இடம்<br>6.மூன்று தளத்தில் உள்ள கழிப்பகங்கள் | 4.00 கோடி | - | திரு. எம்.குணசேகரன் த/பெ. நாகராஜன் 38, எருமாபாளையம் மெயின் ரோடு, கிச்சிப்பாளையம், சேலம் - 636 015 | 28 இலட்சம் | ரூ.3.72 கோடி மாநகராட்சி மதிப்பீட்டை விட குறைவு |
| | | | | திரு.பி.ராஜ்கணேஷ் 165/4. பிரகாசம் நகர், அய்யந்திருமாளிகை, சேலம் - 636 008 | 51 இலட்சம் | ரூ.3.49 கோடி மாநகராட்சி மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | சிப்பம் 2-<br>1.தரை தளம் ஷட்டர் கடைகள் 35-<br>2.தரை தளம் திண்ணை கடைகள்58-<br>3.இரண்டாம் தளத்தில் உள்ள இரு குடோன்கள் நீங்கலாக உள்ள அனைத்து கடைகள் | 7.4235 கோடி | - | திரு.கே.தமிழ்ச்செல்வன் த/பெ. கிருஷ்ணன், 3/250, சிவன் கரடு, சன்னியாசிகுண்டு, சேலம் - 636 015 | 3.87 இலட்சம் | ரூ.3.5535 கோடி மாநகராட்சி மதிப்பீட்டை விட குறைவு |

சென்ற ஆண்டு சிப்பம் 2 ரூ.7,07,00000 /- ற்கும் சிப்பம் 3 ரூ.2,01,00000/- ற்கும் ஏலம் போனது தற்போது 5 சதவிகித உயர்வு அடிப்படையில் சிப்பம் 2 ரூ. 7,42,35000 /- தொகைக்கு ஏல போக வேண்டும். ஆனால் சிப்பம் 2 ரூ.3,87,00000 /- ற்கும் சிப்பம் 1 அதிகபட்சமாக ரூ.51 இலட்சத்திற்கு மட்டுமே உச்சக் கேள்வியாக கேட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி.,

இந்நிலையில் மாநகராட்சிக்கு கடந்தாண்டை விட இந்தாண்டு மிகப்பெரிய வருவாய் இழப்பு ஏற்படும் என்பதை கருத்திற்கொண்டு மேற்படி ஏலங்களை தனித்தனி கடைகள் வாரியாக ஏலம் விட்டால் மேற்படி வருவாய் இழப்பை தவிர்க்க வாய்ப்பு இருப்பதாக உதவி வருவாய் அலுவலர் அவர்கள் பின்வருமாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

வ.உ.சி தினசரி நாளங்காடி ஷட்டர் கடைகள் விபரம்

| வ.எண் | தளங்கள் விபரம் | ஷட்டர் கடை | ஷட்டர் கடை வைப்புத் தொகை ரூ. (கடை ஒன்றுக்கு) | ஷட்டர் கடை வைப்புத் தொகை ரூ. (மொத்த கடைக்கு) | ஷட்டர் கடை மாத வாடகை ரூ. (கடை ஒன்றுக்கு) | ஷட்டர் கடை மாத வாடகை (மொத்த கடைக்கு) | ஷட்டர் கடை வருட வாடகை | முன்பணத் தொகை ரூ. (12 மாத வாடகை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தரைத் தளம் | 35 | 1,200,000 | 42,000,000 | 20,000 | 700,000 | 8,400,000 | 8,400,000 |
| 2 | முதல் தளம் | 36 | 600000 | 21,600,000 | 12000 | 432,000 | 5,184,000 | 5,184,000 |
| 3 | இரண்டாம் தளம் | 36 | 300000 | 10,800,000 | 7000 | 252,000 | 3,024,000 | 3,024,000 |
| கடைகளின் எண்ணிக்கை | | 107 | 2100000 | 74,400,000 | 39,000 | 1,384,000 | 16,608,000 | 16,608,000 |

வ.உ.சி தினசரி நாளங்காடி திட்டுக் கடைகள் விபரம்

| வ.எண் | தளங்கள் விபரம் | திட்டுக் கடை | திட்டுக் கடை வைப்புத் தொகை ரூ. (கடை ஒன்றுக்கு) | திட்டுக் கடை வைப்புத் தொகை ரூ. (மொத்த கடைக்கு) | திட்டுக் கடை மாத வாடகை ரூ. (கடை ஒன்றுக்கு) | திட்டுக் கடை மாத வாடகை ரூ.(மொத்த கடைக்கு) | திட்டுக் கடை வருட வாடகை | முன்பணத் தொகை ரூ. (12 மாத வாடகை) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தரைத் தளம் | 58 | 800,000 | 46,400,000 | 15000 | 870000 | 10,440,000 | 10,440,000 |
| 2 | முதல் தளம் | 40 | 400000 | 16,000,000 | 8000 | 320000 | 3,840,000 | 3,840,000 |
| 3 | இரண்டாம் தளம் | 43 | 100000 | 4,300,000 | 5000 | 215000 | 2,580,000 | 2,580,000 |
| கடைகளின் எண்ணிக்கை | | 141 | 1300000 | 66700000 | 28000 | 1405000 | 16,860,000 | 16,860,000 |

தொடர்ச்சி.,

| வ.உ.சி தினசரி நாளங்காடி கூடை கடைகள் விபரம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | தளங்கள் விபரம் | கூடை கடை | கூடை கடை வைப்புத் தொகை ரூ. (கடை ஒன்றுக்கு) | கூடை கடை வைப்புத் தொகை ரூ. (மொத்த கடைக்கு) | கூடை கடை மாத வாடகை ரூ. (கடை ஒன்றுக்கு) | கூடை கடை மாத வாடகை ரூ.(மொத்த கடைக்கு) | கூடை கடை வருட வாடகை | முன்பணத் தொகை ரூ. (12 மாத வாடகை) |
| 1 | பிரதான நுழைவு வாயில் | 38 | 1200000 | 45,600,000 | 20000 | 760000 | 9,120,000 | 9,120,000 |
| 2 | கோ – ஆப்டெக்ஸ் சந்து | 20 | 1200000 | 24,000,000 | 20000 | 400000 | 4,800,000 | 4,800,000 |
| 3 | மார்க்கெட் சுற்று வட்ட பகுதிகள் | 91 | 1000000 | 91,000,000 | 15000 | 1365000 | 16,380,000 | 16,380,000 |
| கடைகளின் எண்ணிக்கை | | 149 | 3400000 | 160600000 | 55000 | 2525000 | 30300000 | 30,300,000 |

| வ.உ.சி தினசரி நாளங்காடி கறி மார்க்கெட் கடைகள் விபரம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | தளங்கள் விபரம் | திட்டுக் கடை | திட்டுக் கடை வைப்புத் தொகை ரூ. (கடை ஒன்றுக்கு) | திட்டுக் கடை வைப்புத் தொகை ரூ. (மொத்த கடைக்கு) | திட்டுக் கடை மாத வாடகை ரூ. (கடை ஒன்றுக்கு) | திட்டுக் கடை மாத வாடகை ரூ.(மொத்த கடைக்கு) | திட்டுக் கடை வருட வாடகை | முன்பணத் தொகை ரூ. (12 மாத வாடகை) |
| 1 | தரைத்தளம் | 20 | 800,000 | 16,000,000 | 15000 | 300000 | 3,600,000 | 3,600,000 |
| 2 | முதல் தளம் | 27 | 400000 | 10,800,000 | 7000 | 189000 | 2,268,000 | 2,268,000 |
| 3 | இரண்டாம் தளம் (2 குடோன்) | 2 | 1000000 | 2,000,000 | 10000 | 20000 | 240,000 | 240,000 |
| கடைகளின் எண்ணிக்கை | | 49 | 2200000 | 28800000 | 32000 | 509000 | 6108000 | 6,108,000 |

தொடர்ச்சி.,

| வ.உ.சி.தினசரி நாளங்காடி மொத்த கடைகளின் வருமான விவரம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | கடைகளின் விபரம் | கடை எண்ணிக்கை | கடை வைப்புத் தொகை ரூ. (கடை ஒன்றுக்கு) | கடை வைப்புத் தொகை ரூ. (மொத்த கடைக்கு) | கடை மாத வாடகை ரூ. (கடை ஒன்றுக்கு) | கடை மாத வாடகை ரூ.(மொத்த கடைக்கு) | கடை வருட வாடகை ரூ. | (முன்பணத் தொகை ரூ. (12 மாத வாடகை) |
| 1 | ஷட்டர் கடை | 107 | 2,100,000 | 74,400,000 | 39000 | 1384000 | 16,608,000 | 16,608,000 |
| 2 | திட்டுக் கடை | 141 | 1300000 | 66,700,000 | 28000 | 1405000 | 16,860,000 | 16,860,000 |
| 3 | கூடை கடை | 149 | 3400000 | 160,600,000 | 55000 | 2525000 | 30,300,000 | 30,300,000 |
| 4 | கறி மார்க்கெட் கடைகள் | 49 | 2200000 | 28800000 | 32000 | 509000 | 6108000 | 6,108,000 |
| 5 | ஆண்டு குத்தகை | 3 | 0 | 6,500,000 | 0 | 0 | 26000000 | 0 |
| மொத்தம் | | 449 | 9000000 | 337,000,000 | 154000 | 5553000 | 95,876,000 | 69,876,000 |

| ஆண்டு குத்தகை | | | |
|---|---|---|---|
| வ.எண் | வசூல் விபரம் | ஆண்டு குத்தகை ரூ. | முன்பணத் தொகை ரூ. |
| 1 | பூக்கள், காய்கறிகள் உள்ளிட்ட மார்க்கெட்டிற்கு வரும் மூட்டை வகைகள் ஏற்றி வரும் வாகனத்திற்கு சுங்கக் கட்டணம் வசூல் | 12,500,000 | 3,000,000 |
| 2 | பட்டை கோவில் முதல் டவுன் காவல் நிலையம் வரை சாலையோர கடைகளுக்கு சுங்கக் கட்டண வசூல் | 12500000 | 3,000,000 |
| 3 | இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தம் மற்றும் கழிப்பிடம் | 1000000 | 500,000 |
| | மொத்தம் ரூ. | 26,000,000 | 6,500,000 |

| வ.உ.சி. தினசரி நாளங்காடி 2025 – 2026 ஆண்டு வருவாய் தோராயமாக | | |
|---|---|---|
| 1 | மொத்த வைப்புத் தொகை Deposit ரூ. (12 ஆண்டுகள்) | 337000000 |
| 2 | மொத்த வாடகை தொகை Rent ரூ. (ஆண்டுக்கு) | 95876000 |
| 3 | மொத்த முன்பணத் தொகை (Advance) ரூ. | 69876000 |
| மொத்தம் ரூ. | | 502752000 |

தொடர்ச்சி.,

எனவே மேற்கண்ட அடிப்படையில் வைப்பு தொகை , முன்பணத்தொகை, மற்றும் வாடகை நிர்ணயம் செய்து தனிதனியாக பொது/மிண்ணணு ஏலம் விடலாம் என தெரிவித்துள்ளார்.

மேலும் அம்மாப்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் பிரதி ஞாயிற்று கிழமை மட்டும் குறைந்தது 100 முதல் 200 ஆடுகள் வெட்டப்பட்டு வந்தன. மேற்படி ஆடுகளை வெட்டுவதற்கு முந்தைய நாள் கால்நடை துறையின் மூலமாக pre inspection செய்யவும் Post Inspection செய்து தகுதியான கறிகளுக்கு முத்திரையிடவும் தேவையான (Rearing Shed)ஆடு வளர்ப்பு கொட்டகை வசதி ஏதும் வ.உ.சி கறிமார்கெட்டில் இல்லை மேலும் Effluent Treatment Plant சான்றிதழ் மாசு கட்டுபாட்டு வாரியத்தால் இதுவரை வழங்கப்படவில்லை. மேலும் பூ, பழம் , தேங்காய் , காய்கறிகள் , துளசி போன்ற பூஜை பொருட்கள் 400க்கு மேற்பட்ட கடைகள் மற்றும் 3500க்கு மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொது மக்கள் தினந்தோறும் விலைபொருட்களை மொத்தமாகவும் சில்லைரையாகவும் விற்று வருவதால் மேற்படி இடத்தில் ஆடு, கோழி, மீன் போன்ற இனத்தை விற்பனை செய்வது பொது மக்களிடையே சைவம் மற்றும் அசைவ பொருட்கள் ஒரே இடத்தில் வியாபரம் செய்வது விரும்பதகாததாக உள்ளதால் கறி மார்கெட் வியாபாரிகள் யாரும் உள்ளே வரவில்லை மேலும் சேலம் மாவட்டம் மீன் & கசாய் வர்த்தகர்கள் சங்கம் தலைவர் திரு முகமது மைதின் ராவுத்தர் மற்றும் அதன் பொறுப்பாளர்கள் கொடுத்து கொண்டதன் மனுவில் ஆனந்தா பாலம் அடுக்குமாடி வாகன நிறுத்தம் மற்றும் பல்நோக்கு வணிக கட்டிடத்தில் கடைசி இரண்டு தரை கீழ் தளங்களை கோரியுள்ளனர் அதில் (Rearing Shed ) ஆடு வளர்ப்பு கொட்டகை, pre inspection , Post Inspection மற்றும் Slaughter House ற்காக தரை கீழ் அடிதளமும் , ஆடு, கோழி,மற்றும் மீன் போன்றவை விற்பனை சந்தையாக தரை கீழ் முதல் தளமும் வாகன நிறுத்துவதற்கு தரை கீழ் இரண்டாம் தளமும் வழங்கினால் எங்களது வியாபாரம் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்காது பொதுமக்களும் இடையூறின்றி தேவையான அசைவ பொருட்களை வாங்கி செல்வார்கள் என தெரிவித்துள்ளார். மேலும் உயர்நீதி மன்ற உத்தரவின் படி அமைக்கப்பட்டுள்ள வ.உ.சி மார்கெட் பிரச்சனைகள் தொடர்பான குழு விசாரணையின் போதும் மேற்கண்டவாறே வாக்குமூலம் அளித்துள்ளனர். எனவே மேற்படி வ.உ.சி மார்கெட்டிலுள்ள கறி மார்கெட்டை பூ மற்றும் காய்கறி மார்கெட்டுடன் இணைத்து விட்டு கறி மார்கெட்டை மட்டும் வ.உ.சி மார்கெட்டிலிருந்து பிரித்து ஆற்றோரம் ஆனந்தா இறக்கம்

தொடர்ச்சி.,

வாகன நிறுத்தம் மற்றும் பல்நோக்கு அடுக்குமாடி வணிக கட்டிடத்திற்கு மாற்றுவதன் மூலம் பூ மற்றும் காய்கறி வாங்க மற்றும் விற்க வரக்கூடிய பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் நெரிசல் குறைத்து வியாபாரம் தடையின்றி செல்வதற்கும் மேலும் Effluent Treatment Plant சான்றிதழ் மாசு கட்டுபாட்டு வாரியத்தால் எளிமையாக பெற்று கறி மார்கெட் நல்ல முறையில் இயக்கிட வாய்ப்பாக இருக்கும் மேலும் மேற்படி வ.உ.சி. மார்கெட் கறி மார்கெட் இல்லாமல் குகை மற்றும் மணியனூர் பகுதியில்இரண்டு அறுவை மனைகள்செயல்பட்டுவருகிறது எனவே மேற்படி அறுவைமனையை இடமாற்றம் செய்வதால் ஏற்கனவே உள்ளபடி குகை மற்றும் மணியனூர் பகுதிகளில் அறுவைமனை பணிகள் மேற்கொள்ளலாம் எனவும்,

மார்கெட்டுகாக கட்டடப்பட்ட கட்டிடத்தில் பின்வருமாறு கடைகள் உள்ளன.

| வ.எண் | தளங்கள் விபரம் | பூ மற்றும் காய்கறி மார்கெட் | | கறி மார்கெட் | | மொத்த கடைகள் | | ஆக மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஷட்டர் கடை | திட்டு கடை | ஷட்டர் கடை | திட்டு கடை | ஷட்டர் கடை | திட்டு கடை | |
| 1 | தரைத்தளம் | 35 | 58 | 0 | 6 | 35 | 64 | 99 |
| 2 | முதல் தளம் | 36 | 40 | 0 | 27 | 36 | 67 | 103 |
| 3 | இரண்டாம் தளம் | 36 | 43 | 2 குடோன் | 0 | 38 | 43 | 81 |
| 4 | தரை கீழ் தளம் | இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தம், கட்டண கழிப்பிடம் | | | | | | |
| கடைகளின் எண்ணிக்கை | | 107 | 141 | 2 | 33 | 109 | 174 | 283 |

மேற்கண்ட கடைகளை மட்டும் ஏலத்திற்கு கொண்டு வரும் பொழுது 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் வியாபாரிகள் வியாபார தளம் இல்லாமல் பெரிதும் பாதிக்கபடுவார்கள். எனவே அவர்களின் நலனை கருத்தில் கொண்டு தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சில்லரை வியாபாரம் செய்து வரும் இடங்களை போக்குவரத்திற்கு இடையூறின்றி அனுமதித்திட ஏதுவாக நகர சார் ஆய்வாளர் , உதவி வருவாய் அலுவலர், வருவாய் ஆய்வாளர் (சிறப்பு), உதவி பொறியாளர் ஆகியோருடன் ஆய்வு செய்யப்பட்டது.

தொடர்ச்சி.,

அதில் 6அடி நீளம் 4 அடி அகலம் என்கின்ற அளவில் மொத்தம் 149 கூடை கடைகள் அமைக்கலாம் அதே போல் கறி மார்கெட் அறுவை மனையை மேற்படி இடத்தில் இருந்து மாற்றம் செய்யும் பட்சத்தில் அதனை விரிவாக்கம் செய்யும் பொழுது ஏற்கனவே தரை தளத்தில் உள்ள 6 திட்டு கடைகளுடன் கூடுதலாக 14 திட்டு கடைகள் அமைக்கலாம் . மேலும் பூக்கள், காய்கறிகள் உள்ளிட்ட மார்க்கெட்டிற்கு வரும் மூட்டை வகைகள் ஏற்றி வரும் வாகனத்திற்கு சுங்கக் கட்டணம் வசூல் சிப்பம்–1 எனவும், பட்டை கோவில் முதல் டவுன் காவல் நிலையம் வரை சாலையோர கடைகளுக்கு சுங்கக் கட்டண வசூல் சிப்பம்–2 எனவும், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தம் மற்றும் கழிப்பிடம் சிப்பம்–3 எனவும்,ஆண்டு குத்தகை இனமாக ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம். என உதவி வருவாய் அலுவலர் தெரிவித்துள்ளார் அதன் விபரம் பின்வருமாறு

| வ.எண் | தளங்கள் விபரம் | கூடை கடை | திட்டு கடை | ஆக மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | பிரதான நுழைவு வாயில் | 38 | 0 | 38 |
| 2 | கோ –ஆப்டெக்ஸ் சந்து | 20 | 0 | 20 |
| 3 | மார்க்கெட் சுற்றுவட்ட பகுதிகள் | 91 | 0 | 91 |
| 4 | கறி மார்கெட் விரிவாக்கம் செய்வதன் மூலம் | 0 | 14 | 14 |
| கடைகளின் எண்ணிக்கை | | 149 | 14 | 163 |

மேற்கண்ட உதவி வருவாய் அலுவலர் மற்றும் உதவி பொறியாளர் அவர்களின் அறிக்கை, கடந்த கால ஏல நடவடிக்கைகள் உயர் நீதி மன்ற உத்தரவு விவசாயிகள் வியாபாரிகள் பொது மக்கள் ஆகியோரின் நலனை கருத்தில் கொண்டு ஆவண ஆதாரங்களை பரிசீலனை செய்ததில் பின்வரும் விபரங்கள் தெரிய வருகிறது. மேற்கண்டவாறு கூடுதலாக கடைகள் அமைக்கும் பொழுது மொத்த வியாபாரம் மற்றும் சில்லரை வியாபாரத்திற்கான கடைகளின் எண்ணிக்கை பின்வருமாறு

1. ஷட்டர் கடைகளின் எண்ணிக்கை – 107
2. திட்டு கடைகளின் எண்ணிக்கை – 188
3. கூடை கடைகளின் எண்ணிக்கை – 149
4. குடோன் எண்ணிக்கை – 2
5. ஆண்டு குத்தகை – 3

மொத்தம் – 449

தொடர்ச்சி.,

மேற்கண்டவாறு திட்டு கடைகளோ, கூடை கடைகளோ ஆண்டு குத்தகை இனங்களோ உருவாக்குவதாலும் ஏற்கனவே குகை மற்றும் மணியனூர் பகுதிகளில் இரண்டு அறுவை மனைகள் செயல்பட்டு வருவதால் தற்போது வ.உ.சி. தினசரி நாளங்காடியில் உள்ள கறிமார்க்கெட் அறுவைமனை பூ மற்றும் காய்கறி மார்க்கெட்டுடன் இணைப்பதாலும் கட்டிடத்தின் கட்டமைப்பிற்கு (Main Structure) பாதிப்பு ஏதுமில்லை என பொறியாளர் தெரிவித்துள்ளார். மேலும் சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான நகரத்தின் மைய பகுதியில் வியாபாரம் முக்கியதுவம் வாய்ந்த இடத்தில் சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் வாகன நிறுத்தும் இடம் உள்ளிட்ட நான்கு அடுக்குகள் கொண்ட ( 17000x4 = 68000 சதுரடிகள் பரப்புடன்) 5 மின்தூக்கி வசதிகளுடன் புதிதாக கட்டப்பட்டு 2023ம் ஆண்டு திறக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது மேற்படி ஏலதாரர் கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் குறித்து WP. NO. 7300/2024 WMP.NO .8161, 8162, 8163 & 21177/2024 ஆகிய வழக்குகளை ஒருங்கிணைத்து 03.10.2024அன்று மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புரையில் பின்வரும் விவரங்கள் கடைபிடிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் வியாபாரம் செய்ய வருபவர்களுக்கு நிபந்தனையில் தெரிவித்துள்ளவாறும் அரசாணையின் அடிப்படையிலும் 5% ஒதுக்கீடு செய்வதை உறுதி செய்யப்பட வேண்டும். மேலும் வ.உ.சி தினசரி நாளங்காடி கட்டிடத்திற்கு 50 மீட்டர் சுற்றளவில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வண்ணம் கடைகள் ஏதும் இயங்ககூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல் சேலம் மாநகராட்சி 2016-2017 ஆம் ஆண்டில் சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமையாணை இனங்கள் குறித்த சிறப்பு கட்டுப்பாட்டில் அங்காடிக்கு வெளியே அங்காடியின் எல்லையில் இருந்து 100 மீட்டர் அப்பால் இருக்கும் இடங்களில் வாணிபம் செய்யும் இடங்களில் உரிமதாரர் வசூலிக்க கூடாது. என்றும் அங்காடிக்குள் வியாபாரம் செய்யும் நிரந்தர கய்கறி கடை வாடகைதாரர் வியாபாரத்திற்காக தலைசுமையாக கொண்டு வரும் பொருட்களுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்க கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி.,

மேற்கண்ட உதவி வருவாய் அலுவலர் அவர்களின் அறிக்கை மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற உத்தரவு அரசு வழிகாட்டு நெறிமுறைகள் பொது மற்றும் சிறப்பு கட்டுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் மாநகராட்சி வருவாய் இழப்பை தவிர்த்திடும் பொருட்டு இந்நேர்வில் பின்வருமாறு முடிவு செய்யலாம்.

1. மாமன்ற தீர்மானம் எண்.765, நாள்.25.02.2025ன்படி கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.
   i) 2025 – 2026 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டு குத்தகை தொகை செலுத்தாததால் அவர்கள் ஏலம் முடியும் காலமான 28.02.2025 ஆம் தேதிக்குள் 5 சதவிகித கூடுதல் தொகையுடன் கூடிய மேற்கண்ட முழுத் தொகையும் செலுத்தினால் சிப்பம் 2 ஐ திரு.கே.ஜி.லோகநாதன் என்பவர் பெயரிலும் சிப்பம் 3 ஐ திரு.வெங்கடேசன் என்பவர் பெயரிலும் புதுப்பிப்பு செய்யலாம்.
   ii) தவறும் பட்சத்தில் மேற்கண்ட இரண்டு ஒப்பந்தங்களையும் இரத்து செய்து விட்டு புதிய இ – டெண்டர்/ஏலம் கோரலாம்.
   iii) மேற்கண்ட இரண்டு சிப்பங்கள் ஏலம் போகும் வரை துறை வாரியான வசூல் மேற்கொள்ளலாம் அல்லது 12 இல் ஒரு பாகம் தொகையினை முன் கூட்டியே செலுத்தினால் ஒரு மாதத்திற்கு மட்டும் தற்போதைய ஏலதாரரையே அனுமதிக்கலாம்.

   என மேற்கண்டவாறு தெரிவித்து இருந்தும் 28.02.2025–க்குள் சிப்பம் 2ற்கு திரு.கே.ஜி.லோகநாதன் என்பவர் ஓராண்டுக்கு செலுத்த வேண்டிய ரூ.7,42,35,00,000/– முழுமையாக செலுத்தாமல் ரூ.61,86,250/–மார்ச் 2025ற்கு மட்டும் செலுத்தி உள்ளார். எனவே, இந்நேர்வு குத்தகை நிபந்தனை விதி மீறல் என்பதால் 3 ஆண்டுகளுக்கு திரு.கே.ஜி.லோகநாதன் என்பவர் பெயரில் ஏலமாக வழங்கிய சிப்பம் 2னை ரத்து செய்யலாம். அதேபோல் சிப்பம் 3ற்கு 2025–2026ஆம் ஆண்டிற்கு முழு தொகையும் செலுத்தி விட்டு புதுப்பித்துக் கொள்வதாக 17.02.2025ஆம் தேதியில் விருப்ப கடிதம் கொடுத்து விட்டு 28.02.2025ஆம் தேதிக்குள் ரூ.2,11,05,000/– முழுத்தொகையும் செலுத்தாமல் ரூபாய் 50 இலட்சம் மட்டும் 28.03.2025 ஆம் தேதியில் செலுத்தி உள்ளார். இந்நேர்வு குத்தகை நிபந்தனை விதி மீறல் என்பதால் 3 ஆண்டுகளுக்கு திரு.ஜி. வெங்கடேசன் என்பவர் பெயரில் ஏலமாக வழங்கிய சிப்பம் 3னை ரத்து செய்யலாம்.

2. சிப்பம்–1–ற்கு திரு.டி.ராஜ்கணேஷ் என்பவர் ரூ.51 லட்சத்திற்கும் சிப்பம்–2–ற்கு திரு.கே. தமிழ்செல்வன் ரூ.3.87 லட்சத்திற்கும் உச்ச ஏலத்தொகையாக கோரியுள்ளனர். இது மாநகராட்சி நிர்ணயத் தொகையைவிட மிக குறைந்த அளவே உச்சகேள்வி கேட்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கலாம்.
3. வ.உ.சி நாளங்காடி பிரதான நுழைவாயில், கோ–ஆப்டெக்ஸ் சந்து மற்றும் சுற்று சுவரையொட்டி 149 கூடை கடைகளை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் நலன் கருதி 6அடி நீளம் 4 அடி அகலம் என்கின்ற அளவில் புதியதாக உருவாக்கி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

தொடர்ச்சி.,

4. மேலும் நிர்வாக வசதி, விவசாயிகள் ,வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி வ.உ.சி மார்கெட்டிலுள்ள கறிமார்கெட்டை பூ மற்றும் காய்கரி மார்கெட்டுடன் இணைத்து விட்டு கறி மார்கெட்டை மட்டும் வ.உ.சி மார்கெட்டிலிருந்து பிரித்து ஆற்றோரம் அனந்தா இறக்க வாகன நிறுத்தம் மற்றும் பல்நோக்கு அடுக்குமாடி வணிக கட்டிடத்திற்கு மாற்றம் செய்து மேற்படி இரண்டு தரை கீழ் தளங்களை மட்டும் கறி மார்கெட்டாக ஆண்டு குத்தகை அடிப்படையில் ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் .
5. வ.உ.சி நாளங்காடிகறி மார்கெட்டின் தரை தளத்தில் ஏற்கனவே உள்ள ஆடு அறுக்கும் அறுவைமனை தொட்டியினை அப்புறப்படுத்தி விட்டு 6 திட்டு கடைகள் மட்டும் வைத்து கொண்டு கூடுதலாக 14 திட்டு கடைகள் அமைக்கலாம் .
6. 150க்கும் மேற்பட்ட விவசாயிகள் வியாபாரிகள் வியாபார தளம் இல்லாமல் பெரிதும் பாதிக்கபடுவார்கள். என்பதை கருத்தில் கொண்டு தற்போது மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சில்லரை வியாபாரம் செய்து வரும் இடங்களை போக்குவரத்திற்கு பாதிப்பில்லாமல். 6அடி நீளம் 4 அடி அகலம் என்கின்ற அளவில் மொத்தம் 149 கூடை கடைகள் அமைக்க வாய்ப்பு இருப்பதால் அதனை அனுமதிக்கலாம்.
7. ஷட்டர் கடை, திட்டு கடை, கூடை கடை, குடோன்கள் மற்றும் குத்தகை-1, குத்தகை-2, குத்தகை-3 ஆகியவற்றிற்கு மேற்கண்டவாறு உதவி வருவாய் அலுவலர் பரிந்துரை செய்துள்ள வைப்பு தொகை , வாடகை, முன் வைப்பு தொகை ஆகியவற்றை அங்கீகரிக்கலாம்.
8. அரசாணை எண்:32இன் படி 12 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 5 சதவிகித உயர்வு தொகையுடன் புதுப்பித்து கொண்டு மாதாந்திர வாடகை செலுத்தும் வண்ணம் மேற்கண்ட வைப்பு தொகை வாடகை முன் வைப்பு தொகை ஆகியவற்றை பெற்று கொண்டு 107 -ஷட்டர் கடைகள், 188 திட்டு கடைகள், 149 கூடை கடைகள், 2 குடோன்கள் உள்ளிட்டவற்றை மாதாந்திர குத்தகை இனமாக ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.
9. அரசாணை எண்:66இன் படி மூன்றாண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் 5 சதவிகித உயர்வு தொகையுடன் புதுப்பித்து கொண்டு வருடாந்திரம் செலுத்தும் வண்ணம் மேற்கண்ட வைப்பு தொகை வாடகை முன் வைப்பு தொகை ஆகியவற்றை பெற்று கொண்டு குத்தகை-1, குத்தகை-2, குத்தகை-3 ஆகியவற்றை ஆண்டு குத்தகை இனமாக ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.
10. வ.உ.சி தினசரி நாளங்காடி கட்டிடத்தில் இருந்து 50 மீட்டர் சுற்றளவிற்கு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வண்ணம் வியாபாரம் ஏதும் செய்ய கூடாது என மாண்பமை உயர்நீதி மன்ற தெரிவித்துள்ளபடி Plan Approvel பெறாத கட்டிடங்களுக்கு மாநகராட்சி விதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
11. பொது கட்டுப்பாட்டில் உள்ளபடி வாகன போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வண்ணம் கடைகளை வைக்க அனுமதிப்பதோ அல்லது வ.உ.சி தினசரி நாளங்காடி கட்டிடத்தில் இருந்து 100 மீட்டர் சுற்றளவை தாண்டி சுங்க கட்டணம் வசூலித்தாலோ முன்அறிவிப்பின்றி ஒப்பந்ததை இரத்து செய்யலாம்.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம்.

(எல்8/1238/2023)

தீர்மானம். நிர்ணயித்த தொகை ஏலத்தில் வரவில்லை எனில் தனித்தனி கடைகளாக ஏலம் விடலாம்.

**16)** சேலம் மாநகராட்சி **2023-24** ஆம் ஆண்டு SFC பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ் கோட்டம் எண் **39** இல் பசுபல குருநாதன் தெருவில் உள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் கட்டிட பழுது மற்றும் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.**20.00** இலட்சத்திற்கு **24-11-2023** இல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் மதிப்பீடு தொகைக்கு **0.03%** குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s Ganesan Contract Company, ஒப்பந்ததாரர் சேலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.**16,23,905.82/-**ஐ ஏற்று ஒப்புக்கொள்ளப்பட்டு **18-12-2023** இல் பணி ஆணை வழங்கப்பட்டு, தற்போது பணி முடிக்கப்பட்டது.

மேற்படி பணியிடங்களில் ஏற்பட்ட தளஅளவுகளின் மாற்றங்களின் காரணமாகவும், வடிவமைப்பு காரணமாகவும் சில இனங்களில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் உள்ள அளவுகளை விட கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட மாற்றங்களுடன் இப்பணியை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள இனங்களில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் அளவு பணிகளும், அதற்கான செலவுத் தொகையும் பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**I மதிப்பீட்டில் உள்ள இனங்கள் : (BOQ)**

| வ. எண். | இனங்கள் | மதிப்பீட்டில் உள்ள அளவு | தொகை ரூபாயில் | செய்யப்பட வேண்டிய அளவு | தொகை ரூபாயில் | கூடுதலாகும் தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|---|
| 1. | Brick work in cm 1:5mix, using Fly Ash Bricks | 26.00 m3 | 176058.00 | 35.01 m3 | 237052.71 | 60994.71 |
| 2. | Supply, Fabrication & Placing of Steel RTS | 180.00 m2 | 18000.00 | 330.79 Kg | 33079.00 | 15079.00 |
| 3. | Plastering in cm 1:5mix, 12mm thick | 95.00 m2 | 24640.00 | 364.11 m2 | 94304.49 | 69664.49 |
| 4. | Supply and fixing of MS doors with single leave | 3.00 m2 | 6779.00 | 6.65 m2 | 15025.68 | 8246.68 |
| 5. | Painting two coats with Plastic Emulsion paint | 869.00 m2 | 208838.00 | 2422.70m2 | 581448.00 | 372610.00 |
| 6. | Painting two coats enamel paint new iron works | 45.00 m2 | 6434.00 | 204.61 m2 | 29156.93 | 22722.93 |
| 7. | Painting two coats enamel paint old iron works | 81.00 m2 | 6874.00 | 252.96 m2 | 21375.12 | 14501.12 |
| 8. | Supply and fixing of Ornamental Grill Works | 1700.00 Kg | 170000.00 | 2349.98 Kg | 234998.00 | 64998.00 |
| 9. | Supplying and fixing of metal coated sheets Aluminium zinc alloy | 267.00 m2 | 271272.00 | 279.42 m2 | 283890.72 | 12618.72 |
| **II.மதிப்பீட்டில் இல்லாத SOR இனங்கள் :** | | | | | | |
| | Providing two legged scaffolding (8m Height) | | | 52.50 Rm | 68891.55 | 68891.55 |
| | Painting and Lettering to the Name Board | | | 1 bH | 7000.00 | 7000.00 |
| | **Total** | | **888895.00** | | **1606222.20** | **717327.20** |

மேற்படி பணியில் மதிப்பீட்டில் உள்ள இனங்களில் கூடுதல் அளவுகள் **2023-2024** ஆம் ஆண்டு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதிற்கு மன்ற அனுமதியும், இப்பணியினை செய்து முடித்தால்தான் பணி முழுமையடையும் என்பதால் அசல் ஒப்பந்ததாரர் M/s Ganesan Contract Company சேலம். என்பவர் மூலம் அசல் மதிப்பீடு தொகை ரூ.**20.00** இலட்சத்திற்குள், மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டது. இதற்கான செலவுத் தொகை ரூ.**717327.20/-**னை, M/s Ganesan Contract Company சேலம் அவர்களுக்கு வழங்கவும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் பின்னேற்பு வழங்கி அனுமதிக்கலாம்.

**(E3 / Est. No.268/B/ 2023 -2024)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(ஒம்) ஆ, இராமச்சந்திரன்**
**மேயர்**
**சேலம் மாநகராட்சி.**

**சேலம்-1.**
30-04-2025.